(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 101.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 செப்தெம்பர் 21, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

543/ ’16

1.

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் HIV தொற்றுக்கு உள்ளாகியுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களில் எயிட்ஸ் நோயாளர்களென அடையாளங் காணப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) எயிட்ஸ் நோயின் காரணமாக கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் மரணித்த ஆட்களின் எண்ணிக்கை வருட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) HIV காரணமாக இதுவரை மரணித்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) HIV தொற்றுக்கு உள்ளாகியுள்ள ஆட்களின் ஆயுட் காலத்தை அதிகரிக்கச் செய்வதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) HIV பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

606/ ’16

2.

கௌர ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2015 சனவரி தொடக்கம் திசெம்பர் வரை,

(i) அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் கலந்துகொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை யாது;

(ii) பிரதம அமைச்சரையும் உள்ளடங்கலாக மேற்படி விஜயங்களில் கலந்துகொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் யாவர்;

(iii) விஜயம்செய்த நாடுகள் யாவை;

(iv) மேற்படி வெளிநாட்டு விஜயங்களில் கடமை மற்றும் பிரத்தியேக விஜயங்கள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அ (i) இல் குறிப்பிடப்பட்ட விஜயங்களில் அரசாங்க அலுவலர்கள் பங்கேற்றுள்ளனரா;

(ii) ஆமெனில் மேற்படி அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி காலப்பகுதிக்குள் அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் கலந்துகொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களுக்காக செலவாகி உள்ள மொத்தப் பணத்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

611/ '16

3.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கொட்டைப் பாக்கின் அளவு;

(ii) அவற்றின் பெறுமதி;

(iii) ஏற்றுமதியாளர்கள் மற்றும் அவர்களது முகவரி;

(iv) ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் ஏற்றுமதி செய்த அளவு மற்றும் பெறுமதி;

(v) ஒவ்வொரு ஏற்றுமதியாளரும் அரசாங்கத்துக்கு செலுத்திய வரித் தொகை;

ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இது வரையிலான காலப்பகுதியில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கொட்டைப் பாக்கின் அளவு;

(ii) அவற்றின் பெறுமதி;

(iii) இறக்குமதியாளர்கள் மற்றும் அவர்களது முகவரி;

(iv) ஒவ்வொரு இறக்குமதியாளரும் இறக்குமதி செய்த அளவு மற்றும் பெறுமதி;

(v) இறக்குமதி செய்த நாடு;

(vi) ஒவ்வொரு இறக்குமதியாளரும் அரசாங்கத்துக்கு செலுத்திய வரித் தொகை;

ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் இலங்கையில் கொட்டைப் பாக்கின் உற்பத்தி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) இலங்கையின் ஊடாக சட்டவிரோதமாக கொட்டைப் பாக்கு மீள் ஏற்றுமதி செய்யப்படுவதென்பதையும், இதனால் உள்ளூர் கொட்டைப் பாக்கு உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும் ஏற்றுக்கொள்வாரா;

(iii) மேற்படி சட்டவிரோதமான மீள்ஏற்றுமதியை தடுப்பதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

739/ ’16

4.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் களுத்துறை மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் சேமலாப நிதியக் (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

812/ ’16

5.

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்கள் யாவையென்பதையும்;

(ii) 2010 தொடக்கம் 2016 வரை மேற்படி உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் எந்த அரசியல் கட்சியின் கீழ் இருந்தது என்பதையும்;

(iii) ஊவா மாகாண சபையின் இன்றைய முதலமைச்சர் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் பெற்றுக்கொடுத்துள்ள நிதி ஏற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி உதவிகள் யாவையென்பதையும்;

(iv) இன்றைய முதலமைச்சர் பண்டாரவளை மாநகர சபைக்கு ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிகராக தேவையான ஒத்துழைப்பினை வழங்குகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

819/ ’16

6.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சவுதி அரேபியாவின் அரச சார்பற்ற அமைப்பொன்றின் உதவியின் கீழ் அக்கரைப்பற்று, நுரைச்சோலை கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டம் நன்மை பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட முன்னர் 178/2008 ஆம் இலக்கமுடையதாக உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட வழக்குக் கட்டளையின் பேரில் வீடுகளைப் பகிர்ந்தளித்தல் இடைநிறுத்தப்பட்டதோடு, 2009.12.02 ஆந் திகதி வழங்கிய மேற்படி வழக்குத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டு 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கழிந்துள்ளபோதிலும் அத்தீர்ப்பின்படி வீடுகளைப் பகிர்ந்தளித்தல் இடம்பெறாமையால் மேற்படி ஆதனங்கள் பாவனைக்கு பொருத்தமற்ற வகையில் சீரழிந்துள்ளமையால் அவ்வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் செயலாற்ற அம்பாறை மாவட்டச் செயலாளர்/ அக்கரைப்பற்று பிரதேச செயலாளருக்கு ஆலோசனை வழங்குவாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

821/ ’16

7.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினூடாக அரச காணிகளில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி வீடுகளுக்கு உறுதிகள் வழங்கப்படாத குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மாத்தறை மாவட்டத்திலுள்ள அவ்வாறான குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்ட குடும்பங்களுக்கு உறுதிகள் வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்று உள்ளதா;

(iv) அவ்வாறு உறுதிகள் வழங்கப்படும்போது நிறைவு செய்திருக்க வேண்டிய தகைமைகள் யாவை;

(v) அவ்வாறாயின், அவ்வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை உறுதிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது ;

(vi) உறுதிகள் வழங்கப்பட்டாத வீட்டுரிமையாளர்களுக்கு உறுதிகளை வழங்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

545/ ’16

8.

கௌரவ புத்திக பத்திறண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென்னம்பாணியின் மூலம் பல உற்பத்திகளை மேற்கொள்ள முடியும் என்பதையும்;

(ii) இது சீனிக்குப் பதிலாக பயன்படுத்தக் கூடிய சுகாதாரப் பாதுகாப்பான ஒரு மாற்றமாகும் என்பதையும்;

(iii) இந்த கைத்தொழில் மூலம் பெருமளவிலான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தென்னம் பாணி மற்றும் கருப்பட்டி உற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்ட எவ்வளவு பேர் இருக்கின்றார்கள் என்பது தொடர்பாக கணிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அந்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) தென்னம் பாணி மற்றும் கருப்பட்டி உற்பத்தித் தொழிலை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

740/ ’16

9.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் நம்பிக்கை நிதியக் (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

776/ ’16

10.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவில், நிக்கவட்டவன கிராம அலுவலர் பிரிவுக்குரிய தமனயாய, சீகிரிமுல்ல, ஹும்பஸ்கட்டே மற்றும் அருணோதய ஆகிய கிராமங்கள் யானைகளின் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக மேற்படி கிராமங்களில் சுமார் 4500 குடும்பங்களைச் சேர்ந்த மக்களின் உயிர்கள் மற்றும் அவர்களது விவசாயம் என்பன அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வேவல தொடக்கம் தெஹிகஹ எல, தியகெபில்ல வரை காட்டின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மின்சார வேலியை மொறகொடகம, சீகிரிமுல்ல, அளுத்யாய, மைலத்தாவ, கலாபுரய, பொல்லத்தாவ மற்றும் சீகிரிய ஆகிய கிராமங்கள் வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருப்பது ஏனென்பதையும்;

(ii) இதற்காக தம்புள்ள பிரதேச செயலகத்திற்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

823/ '16

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளில் மற்றும் மாகாண சபை பாடசாலைகளில் நிலவுகின்ற தமிழ் மொழி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) இதற்காக ஆசிரியர்கள் ஆட்சேர்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) ஆட்சேர்ப்பின்போது தொண்டர் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

546/ '16

12.

கௌரவ புத்திக பத்திறண,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கித்துள் பாணியின் மூலம் பல உற்பத்திகளை மேற்கொள்ள முடியும் என்பதையும்;

(ii) இது சீனிக்குப் பதிலாக பயன்படுத்தக் கூடிய சுகாதாரப் பாதுகாப்பான ஓர் மாற்றீடாகும் என்பதையும்;

(iii) இந்தக் கைத்தொழில் மூலம் பெருமளவிலான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியும் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) கித்துள் பாணி மற்றும் கருப்பட்டி உற்பத்தியை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் எவ்வளவு பேர் இருக்கின்றார்கள் என்பது தொடர்பாக கணிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கித்துள் பாணி மற்றும் கருப்பட்டி உற்பத்தித் தொழிலை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

13.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் சேமலாப நிதியக் (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்),— 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“ஆலோகா சமூக சேவை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைத்தல்,— 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (1) ஆவது உறுப்புரையின் பிரகாரம், ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு அந்த ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும், அப்பதவியை வகிப்பவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும்;

ஆபத்தை ஏற்க வேண்டிய பதவியான இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2015.02.12 ஆம் திகதி அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவியை வகித்த சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவை நியமனம் செய்ததன் அடிப்படையில், அவருக்கு தனிப்பட்ட வகையில் அமையுமாறு கீழ் குறிப்பிடப்படும் சம்பளம் மற்றும் படிகளை 2015.02.12 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாலும்;

அ. மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவிக்குரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் சகல கொடுப்பனவுகள் (தொலைபேசி கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வீட்டு வாடகைக் கொடுப்பனவு தவிர்ந்த); அத்துடன்

ஆ. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்குரித்தான அமைச்சின் செயலாளருக்கான கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லையாயின் வீட்டு வாடகைக் கொடுப்பனவு.

அதற்கமைவாக, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவிற்கு அரச திரட்டு நிதியத்திலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்,— பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் எனைய கொடுப்பனவுகளை, குறிப்பிட்ட ஆணைக் குழுக்கள் உண்மையிலேயே அலுவல்களை ஆரம்பித்த திகதியினை மேற்குறிப்பிடப்பட்ட செலுத்துகைகள் அமுலாக்கப்படும் திகதியாகக் கருதி செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாலும்:—

(அ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் தலைவர்கள் தவிர ஏனைய தலைவர்களுக்கு ரூபா. 100,000/- மாதாந்தக் கொடுப்பனவவையும், ரூபா.10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கு உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஆ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுத் தலைவர்களுக்கு தமது நிரந்தரப் பதவிக்குரிய சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக, சுயாதீன ஆணைக்குழுத் தலைவர் ஒருவரின் மாதாந்தக் கொடுப்பனவின் 50% ஐ மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்காகவும்;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழு தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்குப் பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படாத உறுப்பினர்களுக்கு ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தான் வசிக்கும் இடத்திலிருந்து ஆணைக்குழு அலுவலகத்திற்குச் செல்வதற்கான தூரத்தின் அடிப்படையில் 350 கிலோ மீட்டர்கள் வரை ரூபா 25,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது 350 கிலோ மீட்டர்களிலும் அதிகளவு தூரத்திற்கு ரூபா 50,000/- போக்குவரத்துக் கொடுப்பனவையும் செலுத்துவதற்காகவும்;

(ஈ) 2015.06.17 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க வர்த்தக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்கு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ரூபா 10,000/- கொடுப்பனவைச் செலுத்துவதற்காகவும்;

(உ) 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் (8) ஆம் உறுப்புரைக்கமைய அந்த ஆணைக்குழுவின் தலைவருக்கு இணையான வகையில் உறுப்பினர்களுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ரூபா 95,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கும் உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 170 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஊ) தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி முதல் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதி வரையிலான காலப் பகுதிக்காக அவர்களது மாதாந்தக் கொடுப்பனவின் ¾ விசேட கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்; மற்றும்

அதற்கமைய, அரசியல் யாப்பின் 41 (அ) சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்தவேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி ( திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்,— காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் கட்டளை,— (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதல் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) ஆம் அத்தியாயத்தின் 2013 காணி கொள்ளல் சட்டத்தின் (நட்டஈடு செலுத்துதல்) ஒழுங்குவிதிகளின் திருத்தம் தொடர்பில் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூலை 26 ஆம் திகதிய 1977/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 13 ஆம் திகதிய 1971/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 13 ஆம் திகதிய 1971/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 28 ஆம் திகதிய 1973/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூலை 12 ஆம் திகதிய 1975/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) ஆம் உப பிரிவின் (ஔ), (க) மற்றும் ( த) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 1878/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 1878/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 திசெம்பர் 12 ஆம் திகதிய 1892/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 20.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ஏ) பிரிவின் கீழ் உள்நாட்டலுவல்கள், கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 03 ஆம் திகதிய 1904/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (த எ), (த ஏ) மற்றும் (ந) பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 26 ஆம் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 22.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ஔ) மற்றும் (ந) பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 26 ஆம் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 23.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 30 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 யூலை 20 ஆம் திகதிய 1924/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 24.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 8) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1938/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 25.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 9) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1938/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 26.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 10) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 27.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல. 11 ) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 28.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 29.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

30.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.